Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 14/2026 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கௌசல்யா |
| Father's Name | – | க/பெ. திருமலைச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced. Legal aid counsel Tr. Sethupathi, present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சி தொண்டாமுத்தூரில் குடியிருந்து கொண்டு வங்கியில் தற்காலிக ஊழியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 22.08.2025ம் தேதி பிசிஆர் வழக்கில் 7 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று பிணையில் வெளியே வந்த எனது கணவர் மாலை 04.30 மணியளவில் வீட்டிற்கு வந்து கண்டாரோழி யாருடன் குடும்பம் நடத்தி கொண்டிருக்கிறாய் என்று கூறி திட்டி என்னை அடித்துவிட்டார்.

இது குறித்து நான் கோட்டூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்முன் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். பின்னிட்டு 03ம் தேதி பிணையில் வெளியே வந்த எனது கணவர் வீட்டிற்கு வந்து என்னை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு யாருடன் குடும்பம் நடத்தி கொண்டிருக்கிறாய் தேவிடியா என்று கூறி என்னை வலது கன்னத்தில் ஓங்கி அறைந்தார், இதனால் எனது வலது காதிலிருந்து இரத்தம் வந்தது. பின்னர் என்னை எட்டி உதைத்தார், மேற்படி சம்பவத்தினை தடுக்க வந்த எனது மாமனார் துரைசாமியை எட்டி உதைத்ததில் அவர் கீழே விழுந்து காலில் அடிப்பட்டது, பின்னர் அருகில் இருந்த ரகுபதி என்பவரும் தடுக்க வந்தார், அவரையும் கீழே தள்ளிவிட்டார்.

இரும்பு கம்பியை எடுத்து காண்பித்து மூன்று பேரையும் கொலை செய்யாமல் விடமாட்டேன் என கூறினார். இரவு 12 மணியளவில் கல்லை எடுதது வீட்டின் மீது எறிகிறார். நான் வேலைக்கு செல்லும்போது எனது வண்டியை பின்னாலேயே துாரத்திக்கொண்டு ஓடிவந்து, தேவிடியா நீ வேலைக்கு போறயா அல்லது யாருடன் போறியா என்று கூறி, அசிங்கமாக பேசினார், என்மீது புகார் அளித்துவிட்டு இருந்துவிடுவியா, நீ ஒரு அனாதை என என்னை அசிங்கமான வார்த்தையால் கூறினார். எனக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

என்னுடைய வீட்டில் இருக்காத, எனது மாமனாருடன் வைத்து தப்பு தப்பாக பேசி வருகிறார், ஒவ்வொரு முறையும் சண்டை வரும்போது அருவாள் எடுத்து மிரட்டி வருகிறார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். (**சாட்சி மிகுந்த பதட்டத்துடன் சாட்சியமளித்தார்.**)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

06.11.2025ம் தேதி வேலை நாள் என்றால் சரிதான், நான் வேலைக்கு கிளம்பி கொண்டிருந்தேன். வங்கி வேலை நேரம் 10 மணியிலிருந்து 6 மணி வரையாகும். கோட்டுரிலிருந்து சமத்துாருக்கு 30 நிமிடத்தில் வந்துவிடுவேன். நான்

தொண்டாமுத்தூரில் வசிக்கிறேன். தொண்டாமுத்தூருக்கும் சமத்தூருக்கும் 25 - 30 நிமிடங்கள் ஆகும். காலை 09.15 – 09.30 மணிக்குள் கிளம்பிவிடுவேன் என்றால் சரிதான்.

எனது கணவர் 03.11.2025 ம் தேதிதான் பிணையில் வெளியே வந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தினமும் காவல்நிலையம் சென்று காலை 10 மணிக்கு கையெழுத்து செய்துவந்தார் என்றால் சரிதான், அன்றைய தினம் காவல்நிலையம் சென்று கையொப்பம் இடவில்லை. முதலில் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு, மருத்துவமனை சென்றேனா என்றால் இல்லை, கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு சுமார் 11.30 மணிக்கு சென்றுவிட்டு பின்னர் 20 – 25 நிமிடம் கழித்து காவல்நிலையம் வந்து புகார் அளித்தேன்.

மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்தில் தகவல் கொடுக்கப்பட்டது. உள்நோயாளியாக நான் சிகிச்சை எடுக்கவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், கோட்டூர் அரசு மருத்துவமனையில் 11.30 மணிக்கு சிகிச்சை பெற்றதாக விபத்து பதிவேடு உள்ளதாகவும், ஆனால் பொய்யாக சித்திரிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும், எதிரி கையெழுத்து செய்வதற்காக அதற்கு முன்பாகவே சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமுல்லையென்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 14/2026 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | துரைசாமி |
| Father's Name | – | கோபால்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused produced. Legal aid counsel Tr. Sethupathi, present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சி தொண்டாமுத்தூரில் குடியிருந்து கொண்டு வாட்டர்மேனாக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. ஆஜர் எதிரி மகன் ஆவார். 2, 3 சம்பவம் எனது மகன் செய்துள்ளார். முதல் வழக்கிலிருந்து அவரை வெளியே எடுத்து வீட்டிற்கு வந்த பின்பு 24 நாள்கள் கையொப்பமிட்டார். பின்னர் அடிதடி, சண்டை, வம்பு செய்து வந்தார். மது அருந்திவிட்டு, வீட்டின் மீது கல்லை தூக்கிபோட்டு குழந்தைகளை மிரட்டி வந்தார். மொன்ன தாயோழி என்று கெட்ட வார்த்தையால் என்னை பேசினார். என்னை எனது மருமகளுடன் சேர்ந்து அசிங்கமாக பேசினார். என்னை தகப்பன் என்று பாராமல் அசிங்கமான வார்த்தைகளால் பேசுகிறார்.

எனது மருமகளை அடித்து காதில் இரத்தம் வந்தது, அதை நான் கேட்க சென்றேன், அப்போது என் பொண்டாட்டியை அடிப்பேன் கேட்கறதற்கு நீ யாருடா என்று கூறி அசிங்கமான வார்த்தையால் பேசினார். போலிசார் பலமுறை வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தனர், வீட்டிற்கு வந்து விசாரித்துள்ளார்கள். எனது மகன் மீது உள்ள கோபத்தின் காரணமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், நான் சொன்னது போல் எந்த சம்பவமும் அந்த நாளில் நடைபெறவில்லையென்றாலும், அதனால்தான் என்னால் தேதியை குறிப்பிட்டு சொல்ல இயலவில்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.